1973 நவம்பர் 26] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அணைந்து போவதாகச் சொல்கிறோம். உறுப்பினர்கள் பேசுவதற்காக நிச்சயமாக ஆப் பண்ணியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். பெண்கள் பிள்ளைகளுக்கு பால் கொடுப்பதைத் தடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இவையெல்லாம் சிறிது மிகைப்படுத்தியிருக்கும் என்று கருதுகிறேன். நிச்சயமாக அந்தக் கொடுமையைச் செய்யமாட்டார்கள். அப்படிச் சொல்கிறார்கள் என்ற கருத்தை ஏ.ஜி. அலுவலகத்திற்கு தெரிவிப்போம். அப்படிப் பட்ட கொடுமை நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு யோசனை சொல்வதாகச் சொல்லிவிட்டு அதைச் சொல்லாமல் உட்கார்ந்து விட்டார்கள். ஒருவேளை இங்கு பேசியதையெல்லாம் மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்ற யோசனையாக இருக்கலாம் என்று நம்புகிறேன். அதைச் செய்வதாக ஏற்கனவே உறுதி கூறியிருக்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் இதில் அதிகக் கவனம் செலுத்தியிருக்கலாம், அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. சொல்லமுடியாத நிலை என்று நினைக்கிறேன். இருந்தபோதிலும் மாநில அரசைப் பொறுத்த அளவிற்கு உறுப்பினர்களின் எண்ணங்களை மத்திய அரசுக்குத் தெரிவித்து இதில் சுமுகமான முடிவைப் பெற முயற்சிக்கும் என்ற உறுதியைக் கூறி இதற்கு மேலும் அவையை ஒத்திவைத்து விவாதிக்க தேவை இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கவேண்டிய தேவையில்லை என்பதால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) மதுரை அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்புச் சாகுபடியாளர் நிலைமைகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அலங்கநல்லூர் சர்க்கரை ஆலைபற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் நடக்கிற அலங்காநல்லூர் சர்க்கரை ஆலேயில் இன்று ஒரு நிலை உருவாகியிருக்கிறது. அங்கு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 86.60 கொடுக்கவேண்டுமென்று ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். கழிந்தாண்டு ரூ. 95 ப்ளஸ் ரூ. 5 என்ற முறையில் ரூ. 100 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 86.60 தான் கொடுக்கப்போவதாக அந்த ஆலே நிர்வாகஸ்தர்கள் இந்த விவசாயிகளிடம் அறிவித்தார்கள். இது மிகவும் குறைவாக இருப்பதன் காரணத்தினால் விவசாயிகள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். இதற்கு அவர்கள் சொல்கிற காரணம் என்னவென்றால் இப்போது விளைச்சலுக்கு அதிகமாகப் பணம் செலவாகிறது, உரம் கூலி போன்றவற்றிற்காக அதிகப் பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது, ஒரு ஏக்கர் கரும்பு பயிரிடவேண்டுமென்றால் ரூ. 2,000-க்கு மேலாக செலவாகிறது என்ற கணக்கையும் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதுமட்டுமின்றி மற்றப் பகுதிகளில் கரும்பிற்கு விலே நிர்ணயித்திருப்பது வேறுமாதிரியாக இருக்கிறது என்ற தகவலேயும் தந்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசம், மகாராஷ்ட்ரம் போன்ற மாநிலங்களில் டன் ஒன்றுக்கு ரூ. 130 வரையில் கொடுப்பதாக எனக்கு அவர்கள் விவரங்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள். இந்தமாதிரி மற்ற மாநிலங்களில் ரூ. 130 வரையில் கொடுக்கப்படும் நேரத்தில் இங்கு இப்படி ரூ. 86.60 என்று வைத்திருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இப்போதுள்ள நிலைமை நமக்கு நன்கு தெரியும். சுல்ட் அடிப்படையில் கம்மியாக இருக்கிறது என்ற காரணத்தைச் சுட்டிக் காட்டுவதாக விவசாயிகள் என்னிடம் கூறினர்கள். பொதுவாக சுல்டைப் பொறுத்தவரையில் அதிகமாக, தரமான கரும்பாக இருப்பதால் ஒழுங்காக இருக்கிறது என்பதையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதேமாதிரி இன்னெரு ஆலேயிலும் நிலைமை இப்படி ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட காரியங்களை யெல்லாம் சரியான முறையில் கண்காணிப்பதற்கு அரசுக்கு பொறுப்பிருக்கிறது. மானேஜ்மெண்டாரை அழைத்து விவசாயிகளுக்கு இருக்கிற பிரச்னேயைத் தீர்ப்பதற்கு அரசு உடனடியாக வழிகோல வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு முக்கியமான பிரச்னே. விவசாயிகள் கரும்பு வெட்டாத காரணத்தால் அவர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள் சொல்

1973 நவம்பர் 26] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கிறார்கள் ஒரு ஏக்கருக்கு 30 டன்னுக்கு மேலாக விளைச்சல் வராது என்று. இந்த விளைச்சல் வந்தாலும் இந்த விலை மிகவும் குறைவாக இருப்பதால் அவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். தமிழகத்தில் உள்ள இந்தக் கரும்பு விவசாயிகளுக்கு இது ஒரு பெரும் தீங்காக இருக்கிறது என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கின்ற காரணத்தினால் இதில் தீர்வு உடனடியாக காண்பதற்கு அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கரும்பு விலை பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். அதையும் இதோடு இணைத்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, எனது தீர்மானம், மத்திய அரசு சமீபத்தில் போட்ட உத்தரவு காரணமாக கரும்புக்கு திடீரென்று குறைந்தபட்ச விலை குறைந்தது காரணமாக விவசாயிகளுக்கு பெரிய நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் நான் இத்தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். சமீபத்தில் மத்திய அரசு ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். கரும்புச்சாறு எந்தளவிற்கு வருகிறதோ அதையனுசரித்து ஒரு டன்னுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கவேண்டும் என்றிருக்கிறது. இப்போது எல்லா ஆலைகளிலும் கரும்பை விவசாயிகள் நிரம்ப கொண்டு போடுகிறார்கள். ஒருசிலருக்கு அதிகப்படியான விலை கிடைத்தது, பெரும்பாலோருக்கு குறைந்த விலையே கிடைக்கிறது. போன வருஷம் இதே அளவிற்கு இந்தக் கரும்புச் சாற்று விலை நிர்ணயித்தார்கள். இந்த வருஷமும் முக்கியமான சமயத்திலே இந்த மாதிரி ஒரு உத்திரவு வந்திருக்கிறது. போனவருஷம் வந்த அதே சாறுதான் இந்த வருஷமும் வருகிறது. போன வருஷம் வந்ததில் இப்போது என்ன குறைந்து விட்டது? அப்போது வந்ததற்கும் இப்போது வருவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? அப்படியிருக்கும் போது இப்போது டன் ஒன்றுக்கு 10 ரூபாய் குறைத்திருப்பதற்கு

என்ன காரணம். இன்றைய தினம் மற்ற மாநிலங்களில் உத்திரப் பிரதேசத்தில் 125 ரூபாய் போதாது என்று 150 ரூபாய் வேண்டுமென போரடக்கூடிய சமயத்தில் நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் இப்படி டன் ஒன்றுக்கு பத்து ரூபாய் குறைத்து உத்திரவு போட்டிருப்பது காரணமாக மக்கள் மத்தியிலே ஆத்திரமேற்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களோடு பார்க்கும்போது தமிழ் மாநிலத்தைப் பொறுத்த மட்டில் ஒரு பாகுபாடு, "டிஸ்கிரிமினேஷன்" காட்டப்படுவதாகத் தோன்றுகிறது.

கரும்புச் சாற்றுக்கு இன்ன விலை என்று நிர்ணயிக்கும்போது மத்திய அரசாங்கம் எப்படி இதை நிர்ணயிக்கிறார்கள். எப்படிப் பரிசீலனை செய்கிறார்கள். இதில் மாநில சர்க்கார் பொறுப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன். இன்றையதினம் உற்பத்திச் செலவு, இன்னும் உரச் செலவு எல்லாம் அதிகரித்துக் கொண்டு போகிற நிலையில் இந்த உத்திரவின் மூலம் அவர்களுக்குக் கிடைக்கின்ற விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை. விழுப்புரம், திருச்சியை எடுத்துக் கொண்டாலும் சரி, கோயமுத்தூரை எடுத்துக் கொண்டாலும் சரி, இன்றைய தினம் பத்திரிக்கையைப் பார்த்தால் பல இடங்களில் விவசாயிகள் கரும்புக்கு 135 ரூபாய் வேண்டுமென்று கேட்டு, கரும்பைக் கொண்டு வராத நிலை இருப்பதைப் பார்க்கலாம். இப்படி அவர்கள் கிளர்ச்சி செய்து கொண்டு இருப்பது தெரியும்.

இதை அகில இந்திய அளவில் எங்கள் கட்சியில் எடுத்துக் கொண்டு டில்லியில் 3-ம் தேதி ஒரு மாநாட்டை கூட்டி அதில் மாநில சர்க்கார் தலையிட்டு மத்திய சர்க்காரை வற்புறுத்தி கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யும்போது கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை நிர்ணயிக்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். எனவே இந்த முக்கியமான விஷயத்தில் கரும்பு உற்பத்தி பண்ணக்கூடிய எல்லா விவசாயிகளையும் பாதிக்கக் கூடிய இந்த விஷயத்தைப் பற்றி இந்தச் சபையை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப்பற்றி ஒரு பிரச்னையை எழுப்பியிருக்

கிறார்கள். நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலேகளைப் பொறுத்த அளவிற்கு சென்ற ஆண்டை விட அதிகமான விலேயை கரும்பிற்குக் கொடுத்து வருகிற ஒரு திட்டத்தை நிறைவேற்றி யிருக்கிறோம். அலங்காநல்லூரைப் பொறுத்த அளவிற்கு மத்திய அரசாங்கம் என்ன விலே நிர்ணயித்ததோ அதை விட ரூபாய் 5 கூடுதலாகக் கிடைக்க வேண்டுமென்று ஒரு உத்திரவு போட்டு குறைந்த பட்சம் 90 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறோம். அலங்காநல்லூரைப் பொறுத்த வரையில் மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலே 95 ரூபாய். ஆனால் நாம் 100 ரூபாய் கொடுத்திருக்கிறோம். "கிரஷ்ஷிங்" ஆரம்பித்தால் அவர்களுக்கு லாபம் வருகிறது என்ற புள்ளி விவரத்தை வைத்துத் தான் அவர்களுக்கு விலேயைக் கூட்டிக் கொடுத்தோம்.

கரும்பிற்கு "ஸ்டாச்சுடரி பிரைஸ்" நிர்ணயிப்பது போல சர்க்கரைக்கு விலே நிர்ணயிப்பதும் மத்திய சர்க்கார். சர்க்கார் உற்பத்தியில் 70 சதவிகிதம் இன்ன விலே என்று மத்திய அரசாங்கம் விலே நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இதற்கு 153, 154 ரூபாய் என்று நிர்ணயிக்கிறார்கள். இப்படி விலே நிர்ணயிக்கும்போது கரும்புக்கு இன்ன விலே என்று நிர்ணயிக்கிறார்கள். இந்த விலேயைத் தான் வரக் கூடிய கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். விளைவு என்ன ஆகிறது என்றால் கணக்கிடும்போது கூட்டுறவு ஆலேகளில் நமக்கு "டாரிப் கமிஷன்" அனுமதித்த உற்பத்தி செலவு சுமார் 165 ரூபாய் ஆகிறது. 70 சதவிகிதம் சர்க்கரைக்கு சர்க்கார் நிர்ணயிக்கிற விலே 154 ரூபாய். மிச்சம் இருக்கிற 30 சத விகிதம் சர்க்கரையை என்ன விலேக்கு வேண்டுமென்றாலும் விற்றுக் கொள்ளலாம் என்று வைத்திருக்கிறார்கள். 70 சதவிகிதம் சர்க்கரையை மத்திய அரசாங்கம் நிர்ணயித்த இந்த விலேக்கு விற்று விட்டு மிச்சம் உள்ளதை 265 ரூபாய் என்று விற்கிறார்கள். அதனால் 100 ரூபாய் லாபம் அவர்களுக்குக் கிடைக்கிறது. எனவே, இப்படி அதிகமாகக் கிடைக்கிற லாபத்திலிருந்து உற்பத்தியாளர் களுக்கு அதிக விலே கொடுக்க வேண்டுமென்ற அவர்கள் கோரு கிறார்கள். மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறது.

[திரு. செ. மாதவன்] [1973 நவம்பர் 26

கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்தவரையில் இப்படி 30 சதவிகிதம் சர்க்கரையை அதிக விலைக்கு விற்கின்ற காரணத்தால் கிடைக்கின்ற லாபத்திலிருந்து உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுத்திருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான தவறும் செய்யவில்லை. உபரியாகக் கிடைத்த 141 லட்சம் ரூபாயிலிருந்து உற்பத்தியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நாம் அதிகமான விலைகொடுத்து இருக்கிறோம்.

கரும்பிற்கு விலை நிர்ணயிக்கிற அதிகாரம் அவர்களிடத்திலே இருக்கிறது. இன்னொரு வேடிக்கை என்னவென்றால் 1973-74-க்கு நம்முடைய அரசாங்கம் சிபாரிசு செய்த விலை 90 ரூபாய், 1972-73-ற்கு நம்முடைய அரசாங்கம் சிபாரிசு செய்தது 80 ரூபாய். ஆனால் அவர்கள் அதற்கும் குறைவாக நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இது நம் எல்லோருக்கும் நன்கு தெரியும். இருக்கின்ற சூழ்நிலையில் மத்திய அரசாங்கம்தான் கரும்பிற்கு விலையை நிர்ணயிக்கிற பொறுப்பிலே இருக்கிறது. மாநில அரசைக் கேட்டு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கொள்கையை முன் வைத்து வற்புறுத்தி வருகிறோம். இதை இந்த அரசு தொடர்ந்து சொல்லி வருகிறது. நம்முடைய அரசைப் பொறுத்த அளவிற்கு எல்லா ஆலை நிர்வாகத்தினரையும் அழைத்துப் பேசுகிற ஒரு முறையை வைத்திருக்கிறோம். "கிரஷ்ஷிங்" ஆரம்பித்திருக்கிறது. எல்லா ஆலைச் சொந்தக்காரர்களையும் அழைத்துப் பேசி எந்த அளவிற்கு கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை வாங்கிக் கொடுக்க முடியும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். எனவே இந்த அளவிற்குக் கூறி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிக்கத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கத் தேவையில்லை என்று கருதி அனுமதி தர மறுக்கிறேன்.